### (6) அறிவிப்பு

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன்வடிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (7) அரசின் சட்ட முன் வடிவுகள்

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன் வடிவு.**

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill 1971."

The motion was put and carried and leave was granted."

THE HON. THIRU S. MADHAVAN, Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (8) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

**(அ) நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 1½ மணி நேரம் தான் இருக்கிறது. இரண்டு மான்யங்களும் அவற்றின் மீது விவாதமும், நேற்று நிறைவேற்றப்படாத மசோதாவும் சேர்ந்து, மொத்தம் மூன்று இருக்கின்றன. இருக்கிற 1½ மணி நேரத்தில் முடித்து விடலாமா, அல்லது மாலையும் வைத்துக் கொள்ளலாமா, அல்லது அவையின் நடவடிக்கைகளை 2 மணிவரை நீடிக்கலாமா? மாலையில் வைத்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சௌகர்யமாக இருக்குமா?

THIRU R. PONNAPPA NADAR : We can sit till 2 O' clock.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விற்பனை வரி மானியத்திற்கு 1 மணி நேரமும், எழுதுபொருள் அச்சுத்துறை மான்யத்திற்கு ½ மணி நேரமும் வைத்துக் கொண்டு நாளை மசோதாவை வைத்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மேலும் ½ மணி நேரம் அவை நடவடிக்கைகளை நீட்டலாம். அநேகமாக 2 மணிக்குள் முடித்து விடலாம். மசோதாவை முடித்துக் கொண்டு, மான்யக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்.